# மெட்ரோ ரயில் நிலைய வாகன நிறுத்தத்தில் விரைவில் கண்காணிப்பு கேமரா

**சென்னை, ஏப்.18:** மெட்ரோ ரயில்நிலையங்களில் உள்ள வாகன நிறுத்துமிடங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்படவுள்ளன.

மெட்ரோ ரயில் நிலைய வாகன நிறுத்தங்களில் குறிப்பிட்ட இடங்களில் வாகனத்தை நிறுத்துவது தொடர்பாக பயணிகளுக்கும் அங்குள்ள ஊழியர்களுக்கும் இடையே அவ்வப்போது மோதல் ஏற்படுகிறது. கடந்த சில மாதங்களில் 3 சம்பவங்கள் நடந்துள்ளன. மாதாந்திர பாஸ் எடுத்த பயணியை நெடுநேரம் காத்திருக்க வைப்பதால், பிரச்னை ஏற்பட்டு பயணிகளுக்கும் வாகன நிறுத்துமிட ஊழியர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதுபோன்ற மோதல்களுக்கு தீர்வு காண சிசிடிவி கேமராக்கள் நிறுவப்படவுள்ளன.

இது குறித்து மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரி ஒருவர் கூறியது: அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களின் (32 மெட்ரோ ரயில்நிலையங்கள்) வாகன நிறுத்தும் பகுதிகளில் தலா 2 முதல் 6 கேமராக்கள் நிறுவத் திட்டமிட்டுள்ளது.

சில நிலையங்களில் இரண்டு கேமராக்கள் மட்டும் தேவைப்படும். சில ரயில் நிலையங்களில், 3 முதல் 4 கேமராக்கள் தேவைப்படும். சிசிடிவி கேமரா நிறுவப்படுவதால் மோதலைத் தடுக்க முடியும். மேலும், பார்க்கிங் ஊழியர் தவறாக நடந்துகொண்டாரா என்று அறிந்த தக்க நடவடிக்கை எடுக்க முடியும் என்றார் அவர்.